பாடம் **10** **நவம்பர் 29-டிசம்பர் 5**



# மெய்யான யோசுவா

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1கொரி 10:1–13; மத் 2:15; யோசு 1:1–3; அப் 3:22–26; எபி 3:7–4:11; 2கொரி 10:3–5.

**மனன வசனம்:** இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. 1கொரி 10:11.

யோசுவா புத்தகத்தில், முக்கியக்கதாபாத்திரமான யோசுவாவின் வாழ்க்கை, அந்த நபரையும் தாண்டி ஒரு பெரிய உண்மையைச் சுட்டிக்காட்டுவது தெரிகிறது. உதாரணமாக, புதிய பூமி குறித்த நம் நித்திய நம்பிக்கைக்கு ஓர் அடையாளமாக கானான் தேசம் இருக்கிறது. இந்த நியதியை வேதாகமம் முழுவதிலும் காணலாம். பூலோக ஆசரிப்புக்கூடாரம் ஒரு மிகப்பெரிய நிஜத்தைச் சுட்டிக்காட்டியது: 'கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும் பிரவேசித்தார்.' எபி 9:11,12.

யோசுவா புத்தகம் எவ்வாறு ஒரு எதிர்கால நிறைவேறுதலைச் சுட்டிக்காட்டுகிறது? அப்புத்தகத்திற்கு அவ்வாறு விளக்கம் காண்பது நியாயம் என்பதை எவ்வாறு அறியலாம்? புதிய ஏற்பாட்டு எதார்த்தங்களையும் கடைசிக்கால நிகழ்வுகளையும் யோசுவா புத்தகத்தின் கருத்துகளுக்கு பொருத்திப்பார்க்க உதவுகிற வேதாகம நியதிகள் என்ன? இதுபோன்ற கேள்விகள் எழுகின்றன.

நிழலியல் சம்பந்தப்பட்ட வேத வியாக்கியான நியதிகளை இந்த வாரம் ஆராய்வோம். வேதாகமத்தில் உள்ள நிழலியல் குறிகாட்டிகளையும், மேசியாவின் ஊழியத்தை யோசுவாவின் வாழ்க்கை முன்னறிவிக்கிற விதத்தையும், அது திருச்சபையிலும் மனித வரலாற்றின் முடிவிலும் நிறைவேறுகிற அடையாளங்களை சுட்டிக்காட்டுகிற விதத்தையும் படிப்போம்.

***2025, டிசம்பர் 6 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# வேதாகம நிழலியல்

**நிழல்கள் அல்லது முன்னடையாளங்களைச் சுட்டிக்காட்டுகிற பின்வரும் வசனங்களை வாசித்து, வேதாகம நிழலியலுக்கு விளக்கமளியுங்கள்: ரோமர் 5:14; 1கொரி 10:1-13; எபி 8:5; எபி 9:23.**

---

ஒரு பழைய ஏற்பாட்டு வசனம் அல்லது நிகழ்ச்சிக்கும், அதற்கு அந்தக் காலத்தில் அல்லது எதிர்காலத்தில் உள்ள அர்த்தத்திற்கும் இடையே காணப்படுகிற தொடர்பையும் சுட்டிக்காட்ட 'நிழல்' (கிரேக்க வார்த்தை **டைபோஸ்**), 'நிஜம் அல்லது நிறைவேறுதல்' (கிரேக்க வார்த்தை **அன்டிடைபோஸ்**) ஆகிய வார்த்தைகளை வேதாகமம் பயன்படுத்துகிறது.

சுவிசேஷத்திலுள்ள பிற உண்மைகளையோ இயேசுவையோ முன்னடையாளமாகக் காட்டின நபர்கள், நிகழ்வுகள், ஏற்பாடுகள்குறித்த சிறப்பு வியாக்கியானம்தான் நிழலியல். ஒரு அச்சை வைத்து, அசல் வடிவத்தைப் புரிந்துகொள்ளலாம்; அதுபோன்றதே நிஜமும் நிழலும். நிழலின் நோக்கத்தை முற்றிலுமாக நிறைவேற்றுவது நிஜம். இவ்வாறு தேவனுடைய மனதில் கருத்தாக நிலவியதை நமக்கு வெளிப்படுத்த தெய்வீகத் திட்டத்தால் உருவானது வேதாகம நிழலியல். எதிர்கால நிகழ்வுகளை (நிஜங்களை) அவை சுட்டிக்காட்டுகின்றன.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தங்கள் விருப்பத்திற்கு கருத்து சொல்வதற்காக சில பழைய ஏற்பாட்டு வசனங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பயன்படுத்தவில்லை. ஒரு பழைய ஏற்பாட்டு நிழலானது, புதிய ஏற்பாட்டில் நிஜமாக நிறைவேறுவதற்குமுன், தீர்க்கதரிசன எழுத்துகளில் அந்த நிறைவேறுதல்பற்றி சொல்லப்பட்டிருக்கும்.

**தாவீதுபற்றி பழைய ஏற்பாடு சொல்வதையும், அதன் நிஜம்பற்றி புதிய ஏற்பாடு சொல்வதையும் பாருங்கள். நிழலியல் செயல்படுகிற விதம்பற்றி இந்த உதாரணத்திலிருந்து என்ன அறியலாம்?**

**அ. தாவீது (சங் 22:1, 14-18):**____________________

---

**ஆ. புதிய தாவீது (எரே 23:5; ஏசா 9:5,6; 11:1-5):**____________________

---

**இ. நிறைவேறுதலைக் காட்டுகிற தாவீது (யோவான் 19:24):**____________________

---

நிழல்களை அடையாளங்கண்டு, பயன்படுத்தவேண்டிய விதத்தை அறிய பழைய ஏற்பாடுதானே உதவுவதை இந்த வசனங்கள் காட்டுகின்றன. அதாவது, பழைய ஏற்பாட்டை வேதாகமமாகப் பெற்றிருந்த புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இயேசுவையும் அவரது ஊழியத்தையும் வெளிப்படுத்த பழைய ஏற்பாட்டு நிழல்களைப் பயன்படுத்தும்படி பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டார்கள்.

# நிழலும் நிஜமும்

எது ஒரு வேதாகம நிழலியல் என்பதையும், ஒரு குறிப்பிட்ட நிழல் புதிய ஏற்பாட்டிலும் அதற்கு பிறகும் எவ்வாறு நிறைவேறியது என்பதையும் வேத வியாக்கியானர்கள் தன்னிச்சையாகத் தீர்மானிக்கமுடியாது. வேதாகம நிழலியலைக் கையாள்வதற்கான விதிகளையும் கட்டுப்பாடுகளையும் வேதாகமம் தானே கொடுக்கிறது.

அதுபோல, நிஜத்தின் நிறைவேற்றம் மூன்று விசேஷித்த கட்டங்களில் நடப்பதை புதிய ஏற்பாடு காட்டுகிறது: 1) கிறிஸ்துவின் வாழ்க்கையில் (கிறிஸ்து ரீதியிலான நிறைவேற்றம்), 2) திருச்சபையின் அனுபவத்தில் (திருச்சபை ரீதியிலான நிறைவேற்றம்), 3) காலத்தின் முடிவில் (முடிவுக்கால ரீதியிலான நிறைவேற்றம்).

இந்த நிழல்களையும் நிஜங்களையும் வேதாகமம் முழுவதிலும் காணலாம், வேதாகமத்தைப் புரிந்துகொள்வதற்கு அவை உதவுகின்றன; இயேசுவையும் இரட்சிப்பையும் நமக்குள்ள இறுதி நம்பிக்கையையும்பற்றி வேதாகமம் போதிக்கிற சத்தியங்களை புரிந்துகொள்வதற்கும் அவை உதவுகின்றன.

**இஸ்ரவேல், யாத்திராகம அனுபவம், ஆசரிப்புக்கூடாரம் ஆகிய பழைய ஏற்பாட்டு நிழல்களைக் கவனியுங்கள்: . இந்த நிழல்கள் கிறிஸ்து ரீதியாக, திருச்சபை ரீதியாக, முடிவுக்கால ரீதியாக எவ்வாறு நிஜமாக நிறைவேறின?**

1. **இஸ்ரவேல்**
   - **அ. கிறிஸ்து ரீதியிலான கட்டம் (மத் 2:15)**
   - **ஆ. திருச்சபை ரீதியிலான கட்டம் (கலா 6:16)**
   - **இ. முடிவுக்கால ரீதியிலான கட்டம் (வெளி 7:4-8,14)**
2. **யாத்திராகம அனுபவம்**
   - **அ. கிறிஸ்து ரீதியிலான கட்டம் (மத் 2: 19-21)**
   - **ஆ. திருச்சபை ரீதியிலான கட்டம் (2 கொரி 6:17)**
   - **இ. முடிவுக்கால ரீதியிலான கட்டம் (வெளி 18:4)**
3. **ஆசரிப்புக்கூடாரம்**
   - **அ. கிறிஸ்து ரீதியிலான கட்டம் (யோவான் 1:14; 2:21, மத் 26:61)**
   - **ஆ. திருச்சபை ரீதியிலான கட்டம் (1 கொரி 3:16, 17; 2 கொரி 6:16))**
   - **இ. முடிவுக்கால ரீதியிலான கட்டம் (வெளி 3:12; 11:19; 21:3; 21:22)**

'வேதாகமத்தின் ஆசிரியர் ஒருவரே என்பதால், வேதாகமத்தின் வெவ்வேறு பகுதிகள் ஒன்றுக்கொன்று இசைவாக உள்ளன. வேதாகமத்தின் கோட்பாடுகள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போகும்; தனித்தனி வசனங்களுக்கான விளக்கங்கள் குறிப்பிட்ட தலைப்புகுறித்து ஒட்டுமொத்த வேதாகமமும் போதிப்பதற்கு இசைவாக இருக்கும்'.[1]

1 Raoul Dederen, ed., Handbook of Seventh day Adventist Theology (Hagerstown, MD: Review and Herald Publishing Association, 2000), p. 65.

---

**சில சமயங்களில், சில வசனங்களின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வது கடினமாக இருக்கும்போது, என்ன செய்கிறீர்கள்?**

# யோசுவா எனும் நிழல்

**வேதாகம நிழலியலின் அடிப்படையில், மோசேயின் வாழ்க்கைக்கும் யோசுவா வின் வாழ்க்கைக்கும் இடையே உள்ள பன்முக ஒப்புமையின் முக்கியத்துவம் என்ன? யாத் 3:1,2; யோசு 1:1-3; எண் 13:1,2; யோசு 2:1; யாத் 3:5; யோசு 5:15.**

---

யோசுவா ஒரு புதிய மோசேயாகக் கொடுக்கப்பட்டதை முதல் வாரத்தில் பார்த்தோம்; எகிப்திலிருந்து விடுதலையான பிறகு முக்கியத்துவம்வாய்ந்த பல நிகழ்வுகளை, இரண்டாம் சந்ததியாரின் வாழ்நாளில் மீண்டும் நிகழ்த்தியவர். மோசேயைப்போல யோசுவாவும் தேவனை தனிப்பட்ட விதத்தில் சந்தித்தபிறகு ஊழியக்கட்டளையைப் பெற்றார். தேசங்கள்மத்தியில் இஸ்ரவேலின் புகழ் பரவியது. இஸ்ரவேலரைக்குறித்த பயம் உண்டாயிற்று. மோசே செங்கடலைக் கடந்து இஸ்ரவேலரை அழைத்துச்சென்றார்; யோசுவா யோர்தானைக் கடந்து இஸ்ரவேலரை அழைத்துச் சென்றார். விருத்தசேதனத்தின் அவசியம், பஸ்கா ஆசரிப்பின் முக்கியத்துவம்குறித்து இரண்டு தலைவர்களுமே உணர்த்தப்பட் டிருந்தார்கள். மோசேயின் காலத்தில் மன்னா பொழிய ஆரம்பித்து, யோசுவா காலத்துடன் நின்றது. இருவரிடமும் பாதரட்சைகளைக் கழற்றும்படி சொல்லப் பட்டது. இருவரும் தங்கள் கரங்களை உயர்த்தியபோது இஸ்ரவேல் வெற்றி பெற்றது. நிலத்தைப் பங்கிடவும், அடைக்கலப்பட்டணங்களை ஸ்தாபிக்கவும் மோசே கட்டளையிட்டார். அந்தக் கட்டளைகளை யோசுவா நிறைவேற்றினார். இருவரும் மக்களிடம் பிரியாவிடை உரையாற்றி, தங்கள் ஊழியத்தின் முடிவில் உடன்படிக்கையைப் புதுப்பிக்குமாறு மக்களிடம் சொன்னார்கள்.

**மோசையேப்போல ஒரு தீர்க்கதரிசி வருவாரென அவரைக்குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை யார் நிறைவேற்றினார்? அதில் யோசுவா எவ்வாறு பொருந்து கிறார்? உபா 18:15-19; 34:10-12; யோவான் 1:21; அப் 3:22-26; அப் 7:37.**

---

மோசே சொன்ன தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி யோசுவாவின் வாழ்க்கை யில் நிறைவேறியது. உபா 18:15,18. ஆனாலும், மோசே சொன்ன தீர்க்கதரிசனத் தின் இறுதி நோக்கம் நிறைவேறவில்லை. அதன் இறுதி நோக்கத்தை மேசியா மட்டுமே சாத்தியமாக்க முடியும் (அல்லது நிறைவேற்ற முடியும்). மேசியா பிதாவை நெருக்கமாக அறிந்திருந்தார். யோவான் 1:14,18. அவர் உண்மையுடன் வாழ்ந் தார்; தேவனை உள்ளபடியே வெளிப்படுத்தினார். லூக் 10:22; யோவான் 14:6; மத் 22:16. தேவன் தம் வார்த்தைகளை அவரது வாயில் வைத்தார். யோவான் 14:24. எனவே, மோசே, யோசுவா என இருவரின் வாழ்க்கையும் வரவிருந்த மேசியா வாகிய இயேசுகுறித்த நிழல்களாக இருந்தன.

---

**தேவனுடன் உங்களுக்குள்ள அனுபவத்தில் இயேசு எவ்வளவு மையம் வகிக்கிறார்? உங்கள் ஒட்டுமொத்த கிறிஸ்தவ அனுபவத்தில் இயேசுவும், அவர் உங்களுக்காகச் செய்திருப்பதும் ஏன் அடிப்படையாக இருக்கவேண்டும்?**

# மெய்யான யோசுவா, நிஜம்

யோசுவாவின் அனுபவத்தை நிழலியல் எனும் கண்ணாடி வழியாகப் பார்க்க வேண்டும். யோசுவா தலைமையின்கீழ் நடந்த யுத்தங்கள் வரலாற்று நிகழ்வுகள், இஸ்ரவேலின் வரலாற்றில் இன்றியமையாத ஒரு பகுதி. அந்த யுத்தங்களின் நோக்கம் இஸ்ரவேலர்களை வாக்குத்தத்த தேசத்தில் குடியமர்த்துவது ஆகும்; அங்கே அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட சுதந்தரத்தை சமாதானத்துடன் அனுபவித்து, தேவ கட்டளையின்படி ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவதே நோக்கம்.

பிறகு, ஏசாயா போன்ற பழைய ஏற்பாட்டு ஆசிரியர்களும், யோசுவா புத்தகத்தில் காணப்படுகிற அதே வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள்; உதாரணமாக, மேசியாவின் பணியில் அவர் '(தம் ஜனங்களை) பாழாய்க்கிடக்கிற இடங்களைச் சுதந்தரிக்கப்பண்ணுவதும்' உண்டென ஏசாயா சொல்கிறார். ஏசா 49:8. இஸ்ரவேலருக்கு தேசத்தைப் பங்கிடுவது யோசுவாவின் பணியாக இருந்ததுபோல, புதிய யோசுவாவாகச் சித்திரிக்கப்படுகிற மேசியாவும் புதிய இஸ்ரவேலருக்கு ஆவிக்குரிய சுதந்தரத்தைப் பங்கிட்டுக்கொடுக்கிறார்.

**புதிய மோசேயாகிய யோசுவா எவ்வாறு இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாக இருப்பதாக புதிய ஏற்பாடு உறுதிப்படுத்துகிறது? எபி 3:7-4:11.**

---

புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இயேசு கிறிஸ்துவினுடைய ஊழியத்தின் பல அம்சங்களை யோசுவாவினுடைய பணியை வைத்துச் சொல்லியுள்ளார்கள். வனாந்தரத்தில் 40 வருடங்கள் செலவிட்டபிறகு கானானுக்குள் யோசுவா சென்றது போல, 'நிஜ யோசுவாவாகிய' இயேசு, வனாந்தரத்தில் 40 நாட்கள் இருந்தபிறகு, தம் பூலோக ஊழியத்திற்குள் பிரவேசித்தார். மத் 4:1-11; லூக் 4:1-13. மேலும் இந்தப் பூமியின் வனாந்தரத்தில் 40 நாட்கள் இருந்தபிறகு பரலோக ஊழியத்தில் பிரவேசித்தார். அப் 1:3,9-11; எபி 1:2.

இயேசு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார்; அது அவர் யோர்தானைக் கடந்ததற்கு அடையாளமாக இருக்கிறது. மத் 3:13-17; மாற்கு 1:9-11. அதற்கு பிறகு சுவிசேஷப் புத்தக ஆசிரியர்கள் ஒரு மேசிய சங்கீதத்திலிருந்தும் (சங் 2:7), யாவேயின் பாடுபடுகிற தாசனைப்பற்றிய ஒரு பாடலிலிருந்தும் (ஏசா 42:1) மேற்கோள் காட்டுகிறார்கள். மத் 3:17, மாற்கு 1:11, லூக் 3:22. இயேசு ஞானஸ்நானம் பெற்று, தெய்வீக வீரராகக் காட்டப்படுகிறார்; அவர் மரணபரியந்தம் மெய்யான கீழ்ப்படிதலுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்ந்து, தீய வல்லமைகளுக்கு எதிராக யாவேயின் யுத்தங்களை நடத்துகிறார். அவரது வாழ்க்கையும் சிலுவை மரணமும் சாத்தானை பரலோகத்திலிருந்து வெளியேற்றியது; நம் ஆவிக்குரிய எதிரிகளுக்கு எதிராக நாம் வெற்றிபெற வழிவகுத்தது; அவரது மக்களுக்கு ஆவிக்குரிய இளைப்பாறுதலை அருளியது; மீட்கப்பட்டவர்களுக்கு ஒரு சுதந்தரத்தை அருளியது. எபே 4:8; எபி 1:4;9:15.

---

**கிறிஸ்து நமக்காகச் செய்திருப்பவற்றில் 'இளைப்பாறுவது' என்றால் என்ன? அதாவது, நமக்காக இயேசு சாத்தானைத் தோற்கடித்துவிட்டார் என்பதை நாம் எவ்வாறு உறுதியாக நம்பமுடியும்?**

# யோசுவாவும் நாமும்

**யோசுவா ஒரு நிழலாக இருக்கிறார், இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தையும் தாண்டி, கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையின் வாழ்வில் நிறைவேறுகிறவற்றைச் சுட்டிக் காட்டுகிறார். யோசுவாவின் தலைமையின்கீழ் இஸ்ரவேலர்கள் செய்த போர்கள் எவ்விதத்தில் திருச்சபையின் ஆவிக்குரிய போராட்டங்களுக்கு முன்னடையாள மாக இருக்கின்றன? எவ்வாறு வித்தியாசப்படுகின்றன? 1 தீமோ 1:18; 2தீமோ 4:7; எபே 6:10-12; 2கொரி 10:3-5; அப் 20:32.**

யோசுவா சம்பந்தப்பட்ட நிழலியலின் திருச்சபை ரீதியிலான நிறைவேறு தலையும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் உணர்ந்திருந்தார்கள். கிறிஸ்து வினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள், அதாவது திருச்சபையார், தீய வல்லமை களுக்கு எதிரான ஆவிக்குரிய போரில் ஈடுபட்டிருக்கிறார்கள்; எனினும், தேவ கிருபையின் இளைப்பாறுதலையும், தங்கள் ஆவிக்குரிய சுதந்தரத்தின் ஆசீர் வாதங்களையும் அனுபவித்து மகிழ்கிறார்கள். எபி 4:9-11.

**யோசுவா சம்பந்தப்பட்ட நிழலியலின் இறுதி நிறைவேறுதல்குறித்து பின்வரும் வசனங்கள் சொல்வது என்ன? 1பேதுரு 1:4; கொலோ 3:24; வெளி 20:9; வெளி 21:3.**

யோசுவா சம்பந்தப்பட்ட முழுமையான நிறைவேறுதல் இயேசு கிறிஸ்து வின் இரண்டாம் வருகையில்தான் சாத்தியமாகும் (முடிவுக்கால ரீதியிலான அம்சம்).

தேவ குணத்தை யோசுவாவின் வாழ்க்கை வெளிப்படுத்தியதால், அவரது வாழ்க்கையின் சில அம்சங்கள் தீர்க்கதரிசன ரீதியாக, மேசியா எனும் நபரையும் அவரது செயல்பாட்டையும் முன்னடையாளமாகக் காட்டுகின்றன.

மேசியா வந்துவிட்டார் என்பதை இன்று நாம் அறிவோம். அவரது ஊழி யத்தை முன்னடையாளமாகக் காட்டவேண்டிய அவசியம் இப்போது இல்லை; ஆனாலும் அவரது குணத்தைப் பிரதிபலிக்கிற சிலாக்கியம் இருக்கிறது; அந்த மகிமையை கிறிஸ்து தம் சீடர்களுடன் பகிர விரும்பினார். யோவான் 17:22. கிறிஸ்துவின் குணத்தைத் தியானிப்பதால் அது நமக்கு சொந்தமாகமுடியும். 2கொரி3:18. நாம் எவ்வளவு அதிகமாக அவரது குணத்தைத்தியானிக்கிறோமோ, அவ்வளவுக்கு அவரது குணத்தின் அழகைப் பிரதிபலிக்கிறோம். கிறிஸ்துவுடன் நாம் தினமும் நடப்பது எதற்கு வழிவகுக்கும் என்பதற்கு இது மிகவும் அடித்தள மாக உள்ளது. அதனால்தான் அனுதினமும் தேவ வார்த்தையில் நேரம் செலவிடு வது மிகமுக்கியம். அதனால்தான், இயேசுவின் வாழ்க்கையையும் குணத்தையும் போதனைகளையும் தியானிப்பதற்கு நேரம் செலவிடவேண்டும். தரிசிப்பதால் நாம் நிச்சயமாகவே மாறுகிறோம்.

---

**நிழலாகிய யோசுவா இஸ்ரவேலர்களிடம், 'உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக் குக் கொடுத்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளப்போகிறதற்கு, நீங்கள் எந்தமட்டும் அசதியா யிருப்பீர்கள்' என்று கேட்டார். யோசுவா 18:3. நிழலாகிய யோசுவா சுட்டக்காட்டிய நிஜமாகிய இயேசு, அந்தக் கேள்வியை இன்று எவ்வாறு கேட்கக்கூடும்?**

# மேலும் படிக்க:

'கிறிஸ்துவின் காலத்திலிருந்தவர்கள் அவருடைய ஊழியப்பணிபற்றிப் புரிந்திருக்க வில்லை. தேவன் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க விரும்பின பாடங்களை பாரம்பரியங்களும் கோட்பாடுகளும் மனிதர்களின் சட்டதிட்டங்களும் மறைத்துவிட்டன. மெய்மார்க்கத்தைப் புரிந்துகொண்டு, அதன்படி நடக்கமுடியாதபடி இந்தக் கோட்பாடுகளும் பாரம்பரியங்களும் தடுத்தன. முன்னடையாளமாகக் கொடுக்கப்பட்டு, அவற்றின் நிழல்கள் சுட்டிக்காட்டியவை கிறிஸ்து எனும் நபரில் நிஜமாக நிறைவேறியபோது உணரவில்லை. நிஜத்தைப் புறக்கணித்து விட்டு, அடையாளங்களையும் பயனற்ற சடங்குகளையும் பிடித்துக்கொண்டனர். தேவகுமாரன் வந்திருந்தார்; ஆனால் அவர்கள் அடையாளத்தைக் கேட்டுவந்தனர். "மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்ற சொன்னபோது, ஒரு அற்புதத்தை நிகழ்த்துமாறு கோரிக்கை வைத்தனர். இரட்சகருக்குப் பதிலாக, அடையாளங்களைக் கேட்டதால், கிறிஸ்து வின் சுவிசேஷமானது அவர்களுக்கு தடைகல்லாயிருந்தது. வெற்றிகரமாக படையெடுப்புகள் நடத்தி, பூமியின் ராஜ்யங்களைக் கவிழ்த்து, தம்முடைய ராஜ்யத்தை நிறுவி, தாம் மேசியா வென அவர் நிரூபிக்க விரும்பினார்கள். இந்த எதிர்பார்ப்புக்கான பதிலைத்தான் விதைக் கிறவனுடைய உவமையில் கிறிஸ்து சொன்னார். படைபலத்தாலோ வன்முறையாலோ அல்ல, மனிதரின் இருதயங்களில் ஒரு புதிய நியதியை வேரூன்றுவதாலேயே தேவனுடைய இராஜ் யத்தை நிலைப்படுத்தி மேலோங்கச் செய்யமுடியும்.'

'நித்திய ஜீவனைப் பெறுவதற்கு கீழ்ப்படியுமாறு தேவன் சொல்கிற எளிய நிபந்த னையை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிற உண்மையுள்ள காலேபுகளும், யோசுவாக் களும் திருச்சபைக்கு தேவை. நம் திருச்சபைகள் ஊழியர்கள் இன்றி தவிக்கின்றன. இந்த உலகம்தான் நம்முடைய களம். சத்தியத்தின் ஒளியை ஒருபோதும் கண்டிராத, கிழக்கத்திய பகுதிகளில் உள்ள அஞ்ஞானிகளைவிட அதிகமாக விக்கிரக ஆராதனையால் நிறைந்துள்ள பட்டணங்களிலும் கிராமங்களிலும் ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். தங்களைப்பற்றி பெருமையாகப் பேசிக்கொள்கிற திருச்சபைகளிலிருந்து ஊழியப்பணியின் ஆவி பறந்து போய்விட்டது; ஆத்துமாக்கள்மீதான அன்பாலும், கிறிஸ்துவின் மந்தைக்குள் அவர்களை வழிநடத்துவதற்கான ஆசையாலும் அவர்களது இருதயங்கள் கொழுந்துவிட்டு எரிவ தில்லை. ஊக்கமான ஊழியர்கள் நமக்கு தேவைப்படுகிறார்கள். "வந்து எங்களுக்கு உதவி செய்யவேண்டும்" என்று ஒவ்வொரு திசையிலுமிருந்து எழுகிற கூக்குரலுக்குப் பதிலளிக் கிறவர்கள் ஒருவருமில்லையா?'

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *உங்களுக்கான கிறிஸ்துவின் ஊழியத்தை சிறப்பாகப் புரிந்துகொள்ள வேதாகம நிழலியல் எவ்வாறு உதவுகிறது?*
2. *நம் ஆவிக்குரிய போராட்டம் எவ்விதத்தில் கானானைக் கைப்பற்றியதற்கு ஒத் திருக்கிறது? எவ்வாறு வித்தியாசப்படுகிறது?*
3. *வேதனை, உபத்திரவம், மரணம் இல்லாத ஓர் உலகம்குறித்த காட்சியானது நம் அன்றாட வாழ்வின் போராட்டங்களில் நமக்கு எவ்வாறு மெய்யான நம்பிக் கையைக் கொடுக்கிறது?*
4. *கிறிஸ்துவின் ஊழியத்தை முன்னடையாளமாகக் காட்டுமளவிற்கு யோசுவா தன் தேவனுடைய குணத்தைப் பிரதிபலித்தார். கிறிஸ்து தம்முடைய குணத்தை அதிக முழுமையாக உங்களில் பிரதிபலிக்கச் செய்வதற்கு நடைமுறைரீதியில் எந்தெந்த வழிகளில் அவரை அனுமதிக்கலாம்?*

# தேவனுடைய நேரத்தில் நம்பிக்கை

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

பிலிப்பைன்ஸ் அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த கிம் சன், விடுமுறைக்காக தென் கொரியாவுக்கு வருகிற சமயங்களில் எல்லாம், வேதாகமத்தில் தான் கற்றுக்கொண்ட விஷயங்களை தன் பெற்றோரிடம் கூறுவான். அவர்களுக்குள் விவாதங்கள் நடக்கும். பிலிப்பைன்ஸில் படித்து முடித்த பிறகு, தென் கொரியாவில் முதுகலை படிப்பில் சேர்ந் தான்; அதன்பிறகு, அட்வென்ட்டிஸ்ட் கோட்பாடுகள்பற்றி தன் பெற்றோரிடம் விவாதிப்பது அதிக தீவிரமடைந்தது. அவனது பெற்றோர் அவர்களது திருச்சபையில் முக்கியஸ்தராக இருந்ததால், அவர்கள் தங்கள் சபையைவிட்டுச் சென்றுவிடக் கூடாதென சுமார் 100 பேர் சேர்ந்து பிரத்தியேக ஜெபக்கூட்டம் நடத்தினார்கள். இறுதியாக, சன்னின் அம்மா அவனிடம், இனி வேதாகமம்பற்றி தங்களிடம் விவாதிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்.

ஒருநாள் பிரசங்கியார் ஒருவர், தேவன் ஒவ்வொருவருக்கும் ஒரு திட்டம் வைத்திருப் பதாகச் சொன்னார். தன் பெற்றோர்பற்றி தான் நினைத்திருந்த திட்டம் தேவனுடைய திட்ட மாக இல்லாமல் இருக்கலாம் என்பதை உணர்ந்தான். தேவனுடைய நேரம் வரும்வரை காத் திருக்க உதவுமாறு ஜெபித்தான். தன் பெற்றோரிடம் இரண்டு வருடங்கள் வேதாகமம்பற்றி விவாதிக்கவில்லை. சன் முதுகலை படிப்பை முடித்து, திருச்சபையில் ஒரு வேலையில் சேர்ந் தான். போதகராக வேண்டுமென ஆசைப்பட்டான். ஆனால் அந்தப் பணி கிடைக்கவில்லை.

நாட்கள் கடந்தன. தன் சொந்த நம்பிக்கைகளின் நிமித்தமாகத்தான் தன் மகனுடைய ஆசைகள் நிறைவேறாமல் இருக்கின்றனவோ என்று சன்னின் அம்மா யோசித்தார். பின்னர் சன்னிடம் பேசிக்கொண்டிருந்த ஒருவர், அவனுடைய பெற்றோர் அட்வென்ட்டிஸ்டுகளா என்று கேட்டது அவருடைய காதில் விழுந்தது. தன் பெற்றோர் வேறொரு சபை பிரிவைச் சேர்ந் தவர்கள் என்று சன் சொன்னான். உடனே சன்னின் அம்மா அவனிடம், “நான் உங்கள் சபை யில் சேர்ந்தால், அது உனக்கு உதவியாக இருக்குமா?” என்று கேட்டார்.

தன் எதிர்காலம்குறித்து தன் பெற்றோர் கவலைப்படுவதை சன் புரிந்துகொண்டான், ஆனால் தனக்காக அவர்கள் அட்வென்ட்டிஸ்டுகளாக மாறுவதை விரும்பவில்லை. “அது உதவியாக இருக்காது. நீங்களே வேதாகமத்தை வாசித்து, தீர்மானிக்க வேண்டும்” என்று கூறினான். அந்தப் பகுதியின் போதகரிடம் தன் பெற்றோரை அறிமுகப்படுத்தினான். அவர் கள் வேத ஆராய்ச்சியைத் தொடங்கினார்கள். சன் விவாதம் செய்தபோது, ஐந்து வருடங்கள் எந்த மாற்றமுமே நடக்கவில்லை. ஆனால் அவர்களாக வேதாகமத்தை ஆராய ஆரம்பித்த போது, இதற்குமுன் அறிந்திராத சத்தியங்களை அறிந்தார்கள், அதில் இயேசுவின் அன்பைக் கண்டார்கள். இரண்டு மாதங்கள் கழித்து, அட்வென்ட்டிஸ்ட் திருச்சபையில் சேர்ந்தார்கள்.

சன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்! தன் குடும்பத்தில் முதல் அட்வென்ட்டிஸ்டாக மாறினார் சன். இப்போது அவரது பெற்றோரும் அட்வென்ட்டிஸ்டுகளாக இருக்கிறார்கள்.



பல வருடங்களுக்குமுன்பு பிலிப்பைன்ஸில் அவர் மூலமாக ஒருவர் இயேசுவை ஏற்றுக்கொண்டார். அப்போது முழுநேர ஊழியராக மாறவேண்டும் என்கிற விருப்பம் அவரில் உண்டானது.

பிலிப்பைன்ஸுக்குச் சென்று 1000 நற்செய்தியாளர்கள் இயக்கத்தில் ஒரு நற்செய்தியாளராகச் சேரத் தீர்மானித்தார்.

***அடுத்த வாரம் அதிகம் வாசிக்கவும்.***